DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.

**Present:Selvi.M. Mayadevi,B.A., L.L.B.,**
**Judicial Magistrate No.I. Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No. 53/2018 |
| Deposition of Witness for Prosecution | PW:1 |
| Cr.No. and Police Station : | 216/2017, கிள்ளை காவல்நிலையம் |
| Name: | திரு. ராஜாராமன் |
| Father's /Husband Name: | த-பெ.ராஜகோபாலன் |
| Village: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 27-05-2026** | |

A 1 died. A2 present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்த போது இரவு 9 மணி இருக்கும் என்றால் சரிதான். அது திருவிழா சமயம் என்பதால் 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு கும்பலாக என்னை தாக்கியதால் யார் என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். யார் என்னை திட்டினார்கள் என்றும். கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் முதல் விசாரணையில் போலீஸார் சொல்லிக் கொடுத்து சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 09.04.2019 அன்று இந்த நீதிமன்றத்தின் முதல் விசாரணையில் சொல்லிய சங்கதிகள் இருந்து தற்போது முரண்பட்டு எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு

தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Selvi.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I,
CHIDAMBARAM.
**Present:Selvi.M. Mayadevi,B.A., L.L.B.,**
**Judicial Magistrate No.I. Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No. 53/2018 |
| Deposition of Witness for Prosecution | PW:7 Additional witness |
| Cr.No. and Police Station : | 216/2017, கிள்ளை காவல்நிலையம் |
| Name: | திரு. பாபு ( காவல் ஆய்வாளர்) |
| Father's /Husband Name: | |
| Village: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 27-05-2026** | |

A 1 died. A2 present.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கிள்ளை காவல் நிலையத்தில் ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் ரவிச்சந்திரன் மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் இளையராஜா பணி மாறுதல் பெற்று வேறு பணியிடம் சென்றுவிட்ட நிலையில் மேற்படி தலைமைக்காவலர் மற்றும் காவல் உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு தெரியும் என்ற வகையிலும் வழக்கு கோப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தின் அனுமதி பெற்று சாட்சியம் அளிக்கிறேன்.

**இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பின்னர் வழக்கு கோப்பு உதவி ஆய்வாளர் ரங்கநாதன் பார்வைக்கு வைக்கப்பட்டது. வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீனிவாசன், திலீப் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், மற்றும் அ.சா.3 -பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை

விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். 26-08-2017 ந் தேதி அன்று 1 மற்றும் 2 எதிரிகளை கீழ் அனுபவம்பட்டு சாலக்கரை மாரியம்மன் கோவில் திடல் அருகே தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து பிறகு தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் ரங்கநாதன் பணிமாறுதல் பெற்றதால் வழக்கு கோப்பு உதவி ஆய்வாளர் இளையராஜா வசம் ஒப்படைக்கப்பட்டது. காயம் அடைந்த அ.சா.1 ராஜாராமனுக்கு சிசிக்சை அளித்த அரசு காமராஜ் மருத்துவமனை மருத்துவர் விஜயஆனந்த் என்பவரை விசாரித்து அவரிடம் காயச்சான்று பெற்று அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்தேன். **மேற்படி காயச்சான்று அ.சா. 5 ஆகும்.** பின்பு விசாரணையை முடித்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்த காரணத்தினால் எதிரிகள் மீது 294(பி), 323, 506(1) இதசவின் ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை புலன் விசாரணை செய்த அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். தற்போது ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஒரு பொய்யான புகாரின் அடிப்படையில் தலைமைக்காவலர் ரவிச்சந்திரன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசர் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களை காவல்நிலையத்தில் தயார் செய்தார் என்றால் சரியல்ல. குறியீடு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் இளையராஜா ஆஜர் எதிரியின் மீது ஒரு பொய்யான குற்ற இறுதியறிக்கை செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Selvi.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram